ஆண்டு சந்தா ரூ. 7.   தனிப் பிரதி அணா 2.   சிலோன் 15 சதம்   REGD. NO 4246

N. SABHAPATHI, B.A.,
NEWS AGENT,
KUMBAKONAM.

திராவிடநாடு

மலர் 11.   26—4—53   இதழ் 43

"ராஜாஜியும் —ராமசாமியும்"

[மு. கருணாநிதி]

★

பத்மநாதா!
கேசவா!
பலராமா!
சேகநாதா!
யசோதா!
ஜெயலட்சுமி!
சரோஜா!

அரசுகட்டிலுக்கும் பஜனைமடத்திற்கும் வேறுபாடுணராத அன்பர் ஆச்சாரியாரின் பகவத் நாமாவளியென்றுதானே நினைக்கிறீர்கள் நீங்கள்! ஆச்சாரியாரின் ஸ்தோத்திரப் பாடலிலே யசோதையும் ஜெயலட்சுமியுங்கூட இடம் பெறுவதில் ஆச்சரியமில்லை. சரோஜா என்று எந்த அம்மையையும் அழைத்து பக்தி சாளி பாடுவது வழக்கத்தில் கிடையாதே என்ற சந்தேகமும் உதிக்கிறது உங்களுக்கு! உண்மைதான்; ஒப்புக்கொள்கிறேன். ஆண்டவனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. அவைகளிலே சில மேலே காணப்படுபவை. ஆனால் அந்த நாமங்கள் ஆச்சாரியாரால் உச்சரிக்கப்பட்டதல்ல! ராமசாமியாரால் சொல்லப்பட்டவை! அன்பாக அழைக்கப்பட்டவை! நாவிலே நீரூற, நெஞ்சிலே இன்பமூற உதிர்க்கப்பட்ட பெயர்கள் அவைகள்.

*

என் நண்பர் தென்னனின் திருமணத்திற்காக 8—4—53-ல் திருவாரூர் சென்றிருந்தேன். மணவிழாவில் ஏற்பட்ட மகிழ்ச்சியும் குதூகலமும் தோழர்களை சந்தித்த இன்பமும் என் உள்ளத்தில் பெருக்கெடுத்தபடியிருந்தன. அந்த ஆனந்த வேளையிலே அதிர்வேட்டு போன்ற ஒரு செய்தியைத் தாங்கியபடி தோழர் ஒருவர் வந்தார். தி.மு.கழகத்தின் தொண்டர். சமரசபாண்டியன் என்னும் பெயருடையவர். அவர் கரத்தைப் பிடித்தபடி ஒரு கொழுந்துச் சிறுவன் நின்றுகொண்டிருந்தான். பத்துவயதுதான் அவனுக்கு! "யார் உங்கள் மகனா?" என்று கேட்டேன். "இல்லை" அல்லது "உண்டு" என்கிற ஒரே பதிலைத்தான் அவரிடமிருந்து எதிர்பார்த்தேன். ஆனால் அவர் ஒரு பெரிய கதையையே சொல்ல ஆரம்பித்துவிட்டார். திராவிடத்தின் இன்றைய நிலையை விளக்கிடும் அந்தக் கதை சோக சித்திரம் என்பது மட்டுமல்ல; நாட்டிலே ஏற்படும் வறுமைக் கொடுமைகளுக்கு—பட்டினிச்சாவுகளுக்கு — அரசாங்கத்தின் அலட்சியம் காரணமல்ல வென்று அங்கலாய்க்கிறார்களே; அவர்களுக்கு ஒரு நல்ல பதிலாகவும் அமைந்தது! கண்ணீர் வெள்ளந்தான் கதை முழுதும்!... ஆனால் சர்வாக நாற்றத்தைப் போக்க பன்னீர் தெளிக்கிறார்களே; அதற்கொரு அருமையான ஆதாரம்! ராசிபுரத்திலே பட்டினிச்சாவு என செய்திவந்தால் "அய்யோ பாவம்" என அனுதாபப்படுகிற இருதயத்தைக்கூட இழந்துவிட்டு 'அந்த சாவுக்குக் காரணம் தாங்களல்ல' என்கிற நிரபராதிப்பட்டம் பெறத் துடிக்கிறார்கள் பிரஜைகளின் பிரதிநிதிகள், பிரம்மத்தையுணர்ந்த பிரதமர் உட்பட! அவர்கள் போடும் திரைகளைக் கிழிக்கும் தன்மையுடையது, அந்தத் தாங்காத வேதனைக் கதை.

*

திருப்பூர் ராமசாமி நாயுடு எட்டு குழந்தைகளுக்குத் தந்தை. அவர் மனைவி கிருஷ்ணம்மா. எட்டு சிட்டுகளையும் பிரிந்து இறப்புலகம் ஏகிவிட்டார். தாயற்ற தளிர்களை பாதுகாக்கவேண்டிய பாரம் முழுதும் ராமசாமி நாயுடுவின் தலையில் விழுந்தது. ராமசாமி பல பங்களாக்களுக்குச் சொந்தக்காரரல்ல; பண்ணை முதலாளியுமல்ல; பஞ்சாலை அதிபருமல்ல; பஞ்சாங்கமேந்தியாவது பிழைத்துவிடலாமென்ற பரம்பரையில் உதித்தவருமல்ல! அப்படிப்பட்ட இனத்தவராயிருந்தாலும் ஹோட்டலில் லோட்டா கழுவிட ஒரு பையன்—தர்ப்பை ஒடிக்க ஒருவன்—புரோகிதத்திற்கு 'அசிஸ்டெண்'டாக ஒருவன் — இன்னோரன்ன வேலைகளில் ஈடுபடுத்தியிருப்பார். அவரோ தாழ்ந்த திராவிடத்தின் வீழ்ந்த இனத்தைச் சேர்ந்தவர். கையிலே மண்வெட்டி; கூடை! பெங்களூரிலே வேலை. பலநாள் வாழ்ந்தார். இல்லை—சாவைத் தடுத்துக்கொண்டிருந்தார். கூலி வேலை செய்து குழந்தைகளைக் காப்பாற்ற முடியவில்லை! 'குசேலர்' ராமசாமி குமுறினார்! கோகுல கிருஷ்ணனா வருவார் 'குபேர வரம்' தர........ அவரும் மார்பிலே பூணூல் புரளுகிறவர்களுக்குத்தானே மகிமை காட்டுவார் பரந்தாமனும்வரவில்லை; அவர் பக்தராம் பாராளும் ராஜாஜியும் அபயந்தரவில்லை! பத்மநாபன் முதல் சரோஜா ஈறாக உள்ள ராமசாமியின் குழந்தைகள் பசியால் துடித்தார்கள். அந்த நேரத்தில் ஞானசம்பந்தருக்குப் பார்வதி பாலூட்டிய பக்குவம்பற்றி ஆராய்ச்சி நடந்துகொண்டிருந்தது ஆச்சாரியார் மாளிகையிலே!

லோகிதாசனைப் பாம்பு கடித்தது பற்றி பிரதமர் பிரலாபிக்கிறார்; அதே நேரத்தில் வறுமை, பிணி, பசி என்னும் ஆயிரம் பாம்புகள் ராமசாமியின் குழந்தைகளைக் கடித்துக்கொண்டிருந்தன. ராமசாமி தமிழகத்தில் திரிந்தார். வாழ வழியில்லை. திராவிடம், என்னையும் என் செல்வங்களையும் வாழ்விக்காதா என அழுதார். திராவிடத்திற்கே வாழ்வு வழங்கப்படவேண்டும்; அப்போதுதான் ராமசாமிகளின் குடும்பங்கள் வாழ வகை கிடைக்கும் என்கிற தெளிவான உண்மையும் அவரைப் பார்த்து அழுதது. பசியெனக் கதறும் சிறார்களுடன் சிங்காரச் சென்னை பூமியில் அலைந்தார்.

"சென்னை...வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தின் தலைநகரம். தர்ம பூமி. தர்மத் தக்கோர் நம்தெரியாதவர்கள் [illegible] வார்த்தை அலங்காரம் [illegible] ஞ்சர்களின் கற்கோட்டை... [illegible] வாழ மனிதன் சம்மதிக்காத மண்ணுலக நரகம் பண்ணையுருட்டி பாட்டாளிகளை மிரட்டி வாழும் பாதகர்களின் பாபச் சுரங்கம்" இப்படியெல்லாம் அவர் உள்ளத்தின் உதடுகள் அசைத்தன. மூலகாரணத்தை உணரமுடியாத அந்த ஏழை, மூத்துக்கடலும் — முல்லைக்கொல்லையும் —தங்கவயலும் — தளிர்சோலையும் வேறொருவர் ஆதிபத்யத்திற்குஅடிமைப்பட்ட சொத்துக்கள்; ஆகவேதான் மண்ணுக்குரியவன் 'வாழ முடியவில்லை என்ற நிலைமையைப் புரிந்துகொள்ள இயலாத அந்தப் பாமர, கண்ணீர்க்கடலானார். அலைச்சலுக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. எட்டு மக்களுடனும் ஒருநாள் ரயில் ஏறினார். ரயில் நின்றிடும் நிலையங்களில தன்குழந்தைகளை ஒவ்வொன்றாக இறக்கிவிட்டார். "மகனே! நம் உறவு இன்றோடு தீர்ந்தது. வாழு, அல்லது சாவு! போ" என்று வாழ்த்தினார். ரயில் 'கூ'வென அலறியது. மகனை, தந்தை பிரிந்தார். இப்படியே எட்டுக் குழந்தைகளையும் பல ஸ்டேஷன்களில் விட்டுவிட்டார். மாயூரம் ஸ்டேஷனில் குழந்தையை விட்டு விட்டுப் பிரிய முயலும்போது, செல்வராசு என்னும் பத்து வயதுப் பையன்மட்டும் கீழே இறங்க மறுத்துவிட்டான். அவனைமட்டும் கடைசியாக திருவாரூர் ஸ்டேஷனில் கொண்டுவந்துவிட்டார். அப்போதும் அவன் அழுது துடித்திருக்கிறான். ரயில் புறப்படும் நேரத்தில் அவனைக்கீழே தள்ளிவிட்டுப் போய்விட்டார். சிறுவனின் காலிலே சிறு காயத்துடன் கீழே விழுந்து கிடந்தான். அவன் பெயர்தான் செல்வராசு. வயது பத்து. அவனுக்கு இளையவர்கள் மூன்று நான்குபேர் வேறு ஸ்டேஷன்களில் விடப்பட்டுவிட்டார்களாம். இப்போது செல்வராசு இரண்டு வாரகாலமாக — தந்தையைப்பிரிந்தது முதல் — திருவாரூரில் தோழர் சமரச பாண்டியன்வீட்டில் வளர்ந்து வருகிறான்.

இதுதான் அந்த நண்பரும், அவர் கரம் பிடித்துநின்ற பத்தாண்டுப் பாலகனும் எனக்குக் கூறிய கதை, ராமசாமியின் வாழ்க்கை வரலாறு.

*

இந்த உண்மை நிகழ்ச்சியைக்கூட ஆச்சாரியார் ஆட்சி, 'ராசீபுரம்' செய்துவிடலாம். கற்பனை ஓவியம் என்று கதை கட்டிவிடலாம். ஆனால் உண்மை, செல்வராசு உருவத்திலே திருவாரூரில் வளருகிறது. உண்மை மட்டுமலல; ஆச்சாரியார் ஆட்சியின் கோணலை விளக்கும் சித்திரம் அது! வடவர் ஆதிக்கத்தால் தேய்ந்து போன திராவிடத்திற்கு எடுத்துக்காட்டு அது! அந்த உருவம் திருவாரூரில்! ஆனால் அதுவா கண்ணுக்குத் தெரியும் ஆச்சாரியாருக்கு; கன்றுக்குட்டிக்கு உயிர் வழங்கிய தியாகப் பெம்மானின் திருவுருவமும் தேரோட்டக் காட்சியுந்தான் தெரியும்.

இது நாட்டின் நிலைமை. சீரிழந்த நாடு! செல்வமிழந்த நிலை! 'இரக்கம் என்ன விலை'யெனக் கேட்கும் ஆட்சி பீடம்! இப்படி ஒரு விசித்திரமா?

ரயிலடியில் குழந்தைகளை விட்ட ஏழை!

கிணற்றிலே சிசுக்களை எறிந்த பெண்மணிகள்!

ஒரு சாண் கயிற்றிலே பசியை அடக்கிக்கொண்ட மனிதஜீவன்கள்!

தண்டவாளத்தில் தலை கொடுத்த தரித்திரநாராயணர்கள்.

இவைகளையெல்லாம் 'ராசிபுரம்' செய்தே மறைத்துவிடலாமென நம்புகிறார் ராஜ்ய பரிபாலனம் புரியும் ராஜாஜி!

ரயிலடியில் குழந்தைகளைவிடும் ராமசாமிகள் வளர்ந்தால் நிலைமை என்ன ஆகும்!

தி. மு. க.

புயல் நிவாரண நிதியளிப்பு விழா

28—4—53 செவ்வாய் மாலை

★ **தஞ்சை திலகர் திடலில்** ★

பொதுச் செயலாளர் அண்ணாதுரை
புயல் நிதிக்குழுச் செயலாளர் மு. கருணாநிதி
தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. கே. நீலமேகம்
கலந்துகொள்வார்கள்.

தஞ்சை மாவட்ட தி. மு. க.

★ **25, 26—4—53 தேதிகளில் லால்குடி மாநாடுகள்** ★

திராவிடநாடு

காஞ்சி] 26—4—53 [ஞாயிறு

பழம், வீழ்ந்தது

★

"உங்களுடைய இந்தக் காலம் நமது முன்னோர் காலம் போன்றதல்ல. உலகம் விரிந்துவிட்டது. அறிவோ, பரந்துகிடக்கிறது. காடு வனங்களெல்லாம் நகரமாகிவிட்டன. மலை, சமுத்திரம், ஆகாசங்களெல்லாம் ஒன்று சேர்ந்த வழியாகிவிட்டன. பலதேசத்து உண்மை நியாயங்களெல்லாம் உங்கள் முன்னால் நடனமாடுகின்றன. அறிவின் ஒளியோ, ஊர்ந்தூர்ந்து வராமல் ஓடிவருகின்றது. அல்லிக்கொடியும், பவழக்கொடியும் மறைந்து பலதேசத்துப் பண்டிதர்கள் உண்மை விளக்கால் பரிசோதித்து எழுதின அறிவு நூல்களும் மொழிபெயர்ப்புகளும் உங்கள் உத்திரத்தின்மேல் சிந்திக்கிடக்கின்றன......"

※

"உலகத்துப் பொதுக் கடவுளே நமது கடவுள், நமது பொதுக் கடவுளே உலகத்துக் கடவுள். சாணிக் கடவுள் காய்ந்தவுடன் எருவுக்குப் போவது போலவே, உலகப் பொதுக் கடவுள் தவிர மற்றெல்லாக் கடவுளும் நம்மை விட்டுப் போய்விடவேண்டும். அப்பொழுதுதான், உலகத்தார் ஆசனத்தில் நமக்கு இடம் கிடைக்கும். மும்மூர்த்திகளும், அவர்கள் பத்தினிகளும், அவர்கள் பிள்ளைகுட்டிகளும், தேவகணங்களும், முப்பது முக்கோடி தேவர்களும், ரிஷிகளும், இவர்கள் அவதாரங்களும், காளி, காட்டேரி, கருப்பண்ணன், இருளன், முதலிய நமது 'அசந்தம்' தெய்வங்களும், அங்கே இடம் பெறுது.

※

"நம் நாட்டிலில்லாத கடவுளா பிற நாட்டிலிருக்கிறது? தில்லையில் நடராஜப் பிரபு ஆடினது போல் வேறு எந்நாட்டிலாவது ஆடினரா! 'தில்லை வாழ் அந்தணர்களின் அடிமைக்கும் அடிமை நான்' என்று சிவபெருமான் எங்காவது சொன்னரா? எல்லா ஏடுகளும் செல்லரித்து மண்மூடிப்போயும் இந்த ஒரு ஏட்டை சிவபெருமான் எவ்வளவோ, அதிக ஜாக்கிரதையாகக் காப்பாற்றி நம்பியாண்டார் நம்பி வந்ததும் அவர்கைக்குப் போய்ச் சேரும்படியாகச் செய்த கருணையை இது வரையிலும் யார் மறந்தார்? நம்பியோ, பிள்ளையாரின் மாணுக்கன். இந்தக்காலத்துப் பிள்ளையாரைப் போன்றதல்ல அந்தக் காலத்துப் பிள்ளையார்கள். எழுநூறு வருஷங்களுக்கு முன்னிருந்த பிள்ளையார்கள், வைத்த படையல்களை யெல்லாம் வாரியுண்டு பாடம் சொல்லிக் கொடுக்கும்! தில்லை வாழ் அந்தணர்களும் நம்பி ஆண்டாரும் சுந்தரரும் பார்ப்பனர்கள். அதனுல்தானே ஆண்டவனும் பார்ப்பனராக வந்து முதல் அடி எடுத்துக்கொடுத்தாரோ?"

'மிருகங்களில் சிங்கமாகவும், பட்சிகளில் ராஜாளியாகவும், மீன்களில் கொம்பன் சுறுவாகவும், மனிதனில் ராஜாவாகவும், நஞ்சையில் மதகடியாகவும், புஞ்சையில் மலையடியாகவும், தோட்டத்தில் ஊரடியாகவும் எல்லா வஸ்துக்களிலும் உயர்ந்ததாகவும், நானிருக்கிறேனென்று நமது கிருஷ்ணன் சொன்னர். சிவமென்றாலே, சந்தோஷமென்று அர்த்தம். சந்தோஷமான சிவமென்னும் கடவுள் நிறைந்திருக்கும் நம் வீடுகளில் நாளை வரும் தீபாவளியில், கொரநாட்டுப் புடவைக்கும், பெங்களூர் பட்டுச்கும், சேலம் குண்டஞ்சு வேஷ்டிக்கும், குஷால்தாஸ் கடை சீமை ஜவுளி தினுசுக்கும், ஏங்கி வருந்துவதை தள்ளிவிட்டாலும், ஒருபடி புழுங்கலரிசிக்கும், கால்படி உளுந்திற்கும் கஷ்டப்படுகிறனே மனிதன், என்ன காரணம்? எங்கே போயிற்று தெய்வாம்சம்?"

※

"என்னென்னமோ, எழுதுகின்றுனய்யா!"

"பச்சை அட்டை 'குடியரசு' பிரித்தால் போதும். விடமாட்டேனென்கிருன்!"

"விதண்டாவாதமென்று தள்ளிடவும் முடியவில்லையே விளக்கம் தந்து, விமர்சனம் செய்து, குற்றங்களையல்லவா, காட்டுகிருன்?"

"புராணம் — வேதாந்தம் — சித்தாந்தம்—எல்லாம், தலைகீழ்ப் பாடமாம்!"

"பெயரே, கைவல்யமாம்! கைவல்யநூலின் பெயரே, அந்த ஆளின் பெயராகவன்றோ, அழைக்கப்படுகிறது."

※

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் பவனிவரத் துவங்கிய காலத்திலே, 'பச்சை அட்டைக் குடியரசு', பலரைத்திடுக்கிடச் செய்தது—மிரண்டனர் பக்தர்கள். கொதித்தனர், வேதாந்தம் சித்தாந்தம் அத்தனையும் கரைத்துக் குடித்ததாகக் கூறிக்கொண்ட மதத் தலைவர்கள். அவர்கள் யாவரும் மருளுமளவுக்கு, 'குடியரசில்' என்ன இருந்தது? — புரோகிதப் புரட்டு! பார்ப்பனச் சுரண்டல்! அக்கிரகாரத்தின் அக்கிரமம்! அய்யரின் மோசடி! என்கிற தீப்பொறி பறக்கும் தலைப்புகள் மட்டுமா? அல்ல! அல்ல!! இத்தனையையும் விளக்கும், எழுத்துக்கள், அங்கே இருந்தன. அவைகளைப் படிக்கும் சு. ம. தோழர்கள் தென்றலின் சோலையில், தேன் குடிப்பது போல ஆடுவர்! மதம்—புராணம், ஆகிய போர்வைகளில் மறைந்து திரியும் பண்டிதரும், சந்நிதானங்களுமோ சஞ்சலமடைவர்! தனித்துக் கூடிப் பேசிக்கொள்வர்.

※

"புராணம்—ஒரு பித்தலாட்டம்" —என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பதாகக் கூறி விடலாம். இப்போதிருக்கும் வாலிப உலகுக்கு, இது போதும்.

ஆனுல், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு! தமிழகத்தின் நிலை, அது வல்ல. காலக்கழனி, காய்ந்து உலர்ந்து கிடந்த நேரம், அது! சுயமரியாதைக் கொள்கையென்றாலே தூற்றப்பட்ட காலம் அது!!—அந்த நேரத்தில், வெட்டு ஒன்று துண்டு இரண்டாக, எதனையும் எடுத்துச் சொல்லிவிட முடியாது. அவ்விதம் சொல்வதன் மூலம், அவைகளிலுள்ள குற்றங்குறைகளை மக்களும் உணர்ந்துவிட மாட்டார்கள். "புராணத்தை ஏன் குற்றம் சொல்கிறோம்?", என்பதில் ஆரம்பித்து, "இவ்வளவு கடவுள்கள் யாருடைய சிருஷ்டி?" என்ற கேள்வியை எழுப்பி, "மனிதன் தவிப்பதேன்?", என்கிற சிந்தனையைத் தூண்டுவதென்றால், ஒவ்வொன்றுக்கும் விளக்கங்கள் தரப்பட வேண்டும்.

அத்தகைய விளக்கங்களைத்தான் அந்தக் காலத்திய 'குடியரசு' ஏடு ஏந்தி வந்தது.

அதனைப் பார்த்ததால் தான் மதவாதிகள் மருண்டனர்—பண்டிதர்கள் பயந்தனர்.

"தேள்,கொட்டும்.தீண்டாதே!", என்று சொல்லுவதைவிட, தேள் கொட்டியதால் ஏற்பட்ட வலியைத் தெரிந்தவன், அதனைப்பற்றி விளக்கினுல், யார் மறுக்க முடியும்?

எனவேதான், கைவல்ய சாமியார் அவர்களின் கட்டுரைகள், வெளி வருவதைக்கண்ட, பண்டிதரும் பக்தர் குழாமும், திகைத்தனர்—விழித்தனர்.

கைவல்ய சாமியார்! — இந்தப் பெயர், அவர்களை, நடுங்கவைத்தது. 'இந்தவாரம் என்ன எழுதுவாரோ?', என்று ஏங்குமளவுக்கு, அவர்தம் சிந்தையைக் குழப்பிற்று.

புராணங்களைக் கரைத்துக் குடித்து, தமிழ்மறைகளின் பெருமைகளைத் தினமும் ஓதி, தமக்கு நிகர் தரணியில் எவருமில்லையென்கிற தருக்கோடு உலவிய, பண்டித மணிகளிடையே 'ஒரு வெடிகுண்டாக' விளங்கினர், நமது கைவல்யம்.

"புராணங்களில் புளுகுகள் அதிகம்"

"கண்டாயோ, நீ? கதையளக்கிருய்!"

"யாரப்பா, நீ. வா, இப்படி"

கைவல்யத்திடம்,சிக்கினோர், மீள முடியாது. அகில உலக வளர்ச்சி, அங்கிருக்கும் ஆண்டவன், நமது மதம், இங்கிருக்கும்தேவாதிதேவர்கள், அவர்களது திருவிளையாடல்கள் அத்தனையையும், ஆதாரங்களோடு எடுத்துக் காட்டுவார். பதிலா கூறமுடியும்? — திகைத்தவனுயிருந்தால், "சு. ம. வைப் பார்த்தீங்களோ?" என்று கேலி செய்துவிடலாம். அவர், கைவல்யமாச்சே! பண்டிதரும் பக்தரும் கூறும் அத்தனை நூல்களையும் கரைத்துக்குடித்தவராச்சே!!

※

வேதாந்தவிற்பன்னர், சித்தாந்தத்தில சிங்கம், தமிழ்மறை ஆய்ந்த தனிப்பெருங்கடல், அஷ்டமாசித்திகளும் அடையப்பெற்றவர், இவ்விதம் பற்பல பட்டங்களைப் பெற்றோர், அப்போதும் அதிகம்.

சுயமரியாதை இயக்கத்தவர்களுக்கு, இவர்கள்தான், சூறவளி போல எதிர்ப்பை எழுப்பி வந்தார்கள். இந்தப் பண்டிதர்களின் கொட்டமடக்கி, அறிவுவழி, அவர்களை மடக்கிய பெருமைக்குரியவர் நமது கைவல்யம் ஆவார்கள். எடுத்ததற்கெல்லாம் குற்றங்களைச் சுமத்தி, குறும்புத்தனமான வாக்குவாதங்களைப் பரவவிட்டு, இடையூருக இருந்த பண்டிதர் குழாத்தைப் பார்த்து, ஒரு முறை தெரிவித்தார்.

"எழுத்துத் தெரிந்து, இலக்கிய இலக்கணம் படித்து, சமபநூல் பார்த்து பண்டிதர்களானோர் பலர் இருக்கிருர்கள். இவர்கள் படித்த சாஸ்திரத்தின் உண்மையுணராது பலர் 'குடியரசை'த் தொடப்படாதென்றும் படிக்கக்கூடாதென்றும் நினைக்கிருர்கள். தங்கள் மாணுக்கர் படிக்கக்கூடாதென்றும் தெரிவிக்கிருர்கள். ஆனுல், மாணுக்கர் அந்தப் பண்டிதர்களின் குறுகிய புத்தி, விவேக வெளிச்சமடையவில்லை என்று நினைத்து அவர்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் நமது கருத்துக்களைப் படித்தே வருகிருர்கள்.

"நாகரிக உலகத்தில் பெரும்பான்மையான வஸ்துக்கள், உண்ணல், களித்தல், கல்வி, பயிற்சி, அரசு, சுயராஜ்யம் முதலியன. இவை தத்தமக்குரிய எல்லையை மீறி அதிக எல்லையை வியாபித்து நிற்கின்றன. இவற்றில் உண்டாகும் சுமையில் பெரும்பகுதி அனுவசியம் என்றும், இதைச் சுமப்பதில் மனிதன் தனது பெரிய பலத்தைக் காட்டுகிருனேயொழிய புத்திக் கூர்மையை காட்டவில்லை; இவை, ஆத்ம லாபத்திற்கு பலனளிக்காது என்றும் பண்டிதர்கள் சொல்லுவதுண்டு. ஒருவன், குளத்தில் அதிக ஆழத்திலிறங்கி நீச்சுத் தெரியாமல் தத்தளிக்கையில், அவன், குளம் முழுவதையும் தன் வீணை வலிய முயற்சிகளால் குழப்பிக்கொண்டு, அங்ஙனம் குழப்புவதால் ஏதேனும் லாபம் கிடைக்குமென்ற மூடநம்பிக்கை கொள்வதுபோல, மேற்கண்ட உலக அவஸ்தையிலிருக்கிறவர்கள், கடவுள், பக்தர்களுக்குத் தோன்றுவதாகச்சொல்லுகிருர்கள். ஆனதால், கடவுள் கைங்கரியமும் சாஸ்திர விசாரணையும் ஏழ்மைத் தன்மையும் போதுமென்று சொல்லும் பண்டிதர்களுமிருக்கிருர்கள். இவர்கள் பக்தியும், ஞானமும் இவர்களோடிருக்கட்டும்" என்று, ஆத்திரமாகத் தீட்டினர். அவர், பழமைகளைக் கண்டிக்கும் போது, ஒருசமயம் எழுத்துக்களில் கனல் பறக்கும்! மற்றோர் சமயம், நகைச்சுவை ததும்பும்—எதிரிகளை எள்ளி நகையாடி, மட்டந்தட்டுவார்,

"வேதம் உயர்ந்ததா? ஆகமம் உயர்ந்ததா? இரண்டும் ஒன்ரு? எதிலிருந்து எது வந்தது? எதை எது போர்த்துக்கொண்டிருக்கிறது? — என்று சண்டை போட்டு, வேதத் துவ்ஸ கோளரி, சைவமத கண்டன சண்டமாருதம், மாயாவாத கண்டன கேசரி என்கிற பட்டங்களைச் சூட்டிக் கொள்வோரின் தர்க்கங்களும், கடவுள் பக்திகளும், எழுதின புஸ்தகங்களும் மோட்சம் கொடுக்காதென்று நாங்கள் சொல்லவரவில்லை. ஆனுல், இதில் செலவழிப்பதில் சிறிது நேரத்தை எடுத்து ஒரு 'பெப்பர்மிண்டு' செய்யப் புஸ்தகம் எழுதியிருந்தால் இவர்கள் பிள்ளைகள் ஆசார தோஷமில்லாமல் பெப்பர்மிண்டு தின்னலாமே? தங்கள் பிள்ளைகள் 'பெப்பர்மிண்ட்' கேட்கையில் ஆசாரதோஷம் வந்துவிடுமென்று அதை அடிக்கவேண்டாமே?"

எவ்வளவு குறும்பு—வேத நூல்களைப் புரட்டி விதண்டாவாதம் செய்வதைவிட, 'பெப்பர்மிண்ட்' செய்யக் கற்றிருக்கலாமே! என்று கேலி செய்வதைப் படிக்கும் எவர் தான் மறுப்புக் கூறமுடியும்!

※

கைவல்யம் அவர்கள் தமது முதிர்ந்த வயதில் நம்மையெலாம் விட்டு, கடந்த 18—4—53 அன்று பிரிந்துவிட்டார். அவரது பிரிவு நம்மைக் கலங்கச் செய்கிறது! பழுத்த அறிவுப்பழம் ஒன்று, வீழ்ந்ததாக எண்ணி — வேதனையடைகிறோம். ஆனுல், மக்கள் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட அந்தப் பெரியாரைப்பற்றி இந்நாட்டு இதழ்களில் சிறு செய்திகூட வரவில்லை! எப்படிவரும்? கைவல்யம் அவர்களும் தாம் கற்ற வேதாந்த சித்தாந்தங்களை 'வியாபாரப் பொருள்களாக்கி' நீறுபூசி, அம்பலவாணனையும், ஆதீனத்துக்காரர்களையும் போற்றித் துதிபாடியிருந்

(5-ம் பக்கம் பார்க்க)

'அளவு கோல்' தேவை!

"ஐயா! அரைவீசை சர்க்கரை கொடுங்கள்"

"இரண்டு கஜம் துணி தேவை!"

"பையனுக்கு காய்ச்சல் — 101 டிகிரி இருக்கிறது"

"அம்மாவுக்கு இருதயநோய்— 'எக்ஸ்ரே' எடுத்துப்பார்த்ததில் தெரிந்தது"

*

அரைவீசை — இங்கே, படிக்கல்லால் நிறுக்கிறோம்.

இரண்டுகஜம் — கஜக்கோலால் அளக்கிறோம்

101 டிகிரி—தெர்மாமீடர் பயன்படுகிறது.

இருதயநோய் — 'எக்ஸ்ரே' மூலம் அறிய முடிகிறது.

*

மனிதர்களுடைய உள்ளத்தில் பக்தி இருக்கிறதா, அது உண்மைப் பக்தியா, வெளிவேஷமா, எந்தளவில் இருக்கிறது என்றெல்லாம், கண்டுபிடிக்கவும் அளந்து கணக்கிடவும், அவசரமாகப் புது அளவுகோல் ஒன்று தேவை! அவசரமாகத் தேவை!—அன்பர் ஆச்சாரியாருக்குத் தேவை!!!

*

அளவுகோலா? அளந்து கணக்கிடவா? ஆச்சாரியாருக்கா? அதுவும் மனிதனுடைய பக்தியைப் பரிசோதிப்பதற்கா? — என்று கேள்விக் குறிகள் எழுப்பலாம். எனினும் ஆச்சாரியார் அறிவித்திருக்கிறார், அவ்விதம்.

தஞ்சைத் தரணியின் இடிந்த கோட்டைகளையும் பாழடைந்த சின்னங்களையும் பார்க்கச் சென்ற முதலமைச்சர் ஆச்சாரியார், அங்ஙனம் அறிவித்திருக்கிறார்.

"பக்தியுள்ளவர்கள் மட்டுமே கோயிலுக்குள் செல்லவேண்டும். பக்தியிலாதவர்களைக் கோயிலுக்குள் நுழையவிடக் கூடாது"

என்பதாக, அங்கே, திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். மாற்று மதத்தவர்கள்கூட, கோயிலுக்குள் செல்லலாம் — பக்தியற்ற பதர்கள் பரமனின் திருக்கோயிலுக்குள் நுழைதல் தகாது என்று கூறுகிறார்.

ஆண்டவனுக்கு 'அடியார்'களைத் தேடித்தரும் இலாகாவின் தலைவராக இயங்கிவரும் ஆச்சாரியார் அவர்களின் ஆசார அனுஷ்டானம் தவறாத பகவத்பிரீதியைக் காணப் பாராட்டுகிறோம். பக்தகோடிகளன்றி, பதர்கள், ஈசன் கோயிலில் நுழைவது ஆகாதுதான்! கூடாதுதான்!!

மும்மலம் கடந்து முக்தியாசை பெறும் ஆசையுடன், இதயத்தை ஈசன்பால்வைத்து, பகவத் நாமத்தைப் பஜிக்கும் பக்தர்களால், இறைவன் கோயில்கள் நிரம்பட்டும்! பக்தி, மணக்கட்டும்!! — ஆட்சேபமில்லை, நமக்கு.

இகலோக இச்சைகளில் ஆசை வைத்து, உள்ளொன்றும் புறம் ஒன்றுமாக, பக்தி மனோபாவமின்றி, கோயிலுக்குள் நுழைவது, தடுக்கப்படட்டும்—ஆட்சேபமில்லை நமக்கு.

ஆனால், இவன் ஈசுவரபக்தி உடையவன்!, "இவனுக்குப் பக்தி கிடையாது!" என்கிற உண்மையை அறிய, என்ன செய்யப்போகிறார், ஆச்சாரியார்?

இதனை எண்ணும்போதுதான், வயோதிகத்தின் வளைவாலும் அரசபாரத்தின் சுமையாலும் தள்ளாடும் அவர்பால் அனுதாபம் பிறக்கிறது நமக்கு.

பக்தி உடையோர்மட்டுமே கோயிலுக்குச் செல்லவேண்டும்—செல்லட்டும்; ஆட்சேபமில்லை நமக்கு.

பக்தியற்றோரை, கோயிலுக்குள் நுழையவிடோம்!—

நல்லது; நுழையவிடவேண்டாம்.

பக்தி உடையோர்,

பக்தி இல்லாதோர் — என்கிற உண்மையை ஒவ்வொரு மனிதனையும் பார்த்து எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?

திருக்கோயில்களின் வாயிலிலே சர்க்காரின் உத்யோகஸ்தர்களை நிறுத்தி—பட்டம் பெற்றோர் இந்த உத்தியோகங்களுக்கு லாயக்கில்லையென்றால் பாகவதசிரோன்மணிகளையே நியமித்து—கோயிலுக்குள் செல்வோரை "வடிகட்டி" உள்ளே அனுப்புவாரா? அப்படி அனுப்புவதென்றாலும், 'வடிகட்டுவதற்குள்ள' விதிகள் யாவை? பக்தியுள்ளவனையும், பக்தியில்லாதவனையும் எந்த 'கருவியை'க் கொண்டு அளவிடப் போகிறார்?

*

"இவர் உள்ளத்தில் அரைவீசை பக்தி இருக்கிறது—உள்ளேவிடு!'—"இவரிடம் இரண்டு கஜம் பக்தி இருக்கிறது. உள்ளே அனுமதி"

"இந்த அம்மாவிடம் பக்தி—102 டிகிரி இருக்கிறது. போகலாம்விடு!"

இதுபோலவா?—எவ்விதம்கணக்கிடப்போகிறார், பக்தியை அறிய! 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்தா? முடியுமா, அவ்விதம். பக்தியை எடைபோடுவாரா, அளந்து பார்ப்பாரா, ஆசாமிகளின் நாடியைப் பிடித்துப் பார்த்தா, இருதயத் துடிப்புகளைக் கணக்கிட்டா? — எவ்விதம், பக்தி யிருக்கிறவன், இல்லாதவன் என்பதைக் கண்டு பிடிக்கப்போகிறார்?

*

நிரீசுரவாதிகள் கோயிலுக்குள் நுழையாமல் தடுத்து, பகவான்மீது பக்தியால் உருகிப் பரவசமடைய விரும்புவோரை உள்ளே விடுத்து, இறைவன் கோயில்களில், பக்தி மழை பொழியச் செய்யும், ஆச்சாரியாரின் ஆசை நல்லதுதான்! ஆனால், பக்தி, மனிதனிடம் இருக்கிறது—அல்லது இல்லை — என்பதை எவ்விதம், அளக்கப்போகிறார், அவர்.

"ஆகா! அதோ வருகிறாரே, ஆசாமி அவர்தான் உண்மையாகப் பக்தி உடையவர். ஏனெனில் நெற்றியில், இரண்டு அங்குல அகலத்துக்குப் பளபளவென்று மின்ன, நாமம் இட்டிருக்கிறார்!"

"இவரும் உண்மைப் பக்தர்தான் —இவர் நெற்றியில் விளங்கும் திருநீறு செப்புகிறது!"

இவ்விதம், நெற்றியிலே விளங்கும் நாமத்தையும் நீற்றுப்பூச்சையும் வைத்து, பக்தியை, எடைபோடப் போகிறாரா?

'ஆம்'—என்று கூறுவதாகவைத்துக்கொள்வோம். அவைகளே பக்தியின் சின்னங்கள்; ஆகவே, நாமமோ நீறோ பூசியவர்களையே 'பக்தி'யுடையோராகக் கணக்கிடுவதாகவே கருதுவோம்.

அழகான பெண்—வயது இருபது — வசீகரமான முகம் — கையிலே பூக்கூடை—கோயிலுக்குள் நுழைகிறாள்! — கோயிலோ பெருமாள் கோயில்!!

போக அனுமதி கிடைக்குமா? நெற்றியில் பெரிது பெரிதாக மூன்று நாமங்களைச் சாத்திக் கொள்ளவில்லையே, அந்தப் பெண்!

என்ன செய்வார், ஆச்சாரியார்?

இதோ ஒருவர் — நாமம் போட்டுக் கொண்டிருக்கிறார் — ஆனால் கீழே 'பாதம்' வைத்துக் கொள்ளவில்லை—வடகலையா? தென்கலையா? என்கிறார், கோயில் அர்ச்சகர். 'வடகலை நாமமே, பக்தியின் சின்னம்!'—என்கிறார்கள். 'இல்லை—தென்கலையே திருமாலை அடையச் செய்யும் மார்க்கம்' என்கிறார்கள், மற்றோர் குழுவினர். என்ன, செய்வார், ஆச்சாரியார்—எதனைப் பக்தியின் சின்னமென்று எடுத்துக் கொள்வார்?

*

'எதுவோ ஒன்று, மதச் சின்னம் அணிந்திருந்தால் போதும்-அதுவே 'பக்தி'யின் சின்னம்,' என்று ஆச்சாரியார், 'அளவு கோல்' நிர்ணயிப்பதாகவே வைத்துக் கொள்வோம்.

கூப்பிய கரங்கள்! பகவான் நாமத்தை உதடுகள் உச்சரித்தவண்ணம் உள்ளன! ஆண்டவன் சந்நிதானத்தில் மெய்மறந்து ஆடுகிறார்! நெற்றியிலோ, நீறு! அர்ச்சனைக்கு ஆயிரம் ரூபாய் செலவு!—ஆனால் அந்த ஆசாமியின் ஆலையிலே வேலை பார்க்கும் ஆயிரம் ஏழைகளை, அப்போதுதான் வேலையை விட்டு நீக்கி விட்டு வந்திருக்கிறார்.

ஆயிரம் பேர் வயிற்றிலடித்தவர்—ஆண்டவன் கோயிலில் ஆடுகிறார்!

'பக்திமான்'—ஆச்சாரியார் அளவுகோல்படி.

'அக்கிரமக்காரன்'—இது, மக்களின், தீர்ப்பு.

இதயத்தில் கொடூர சிந்தை இருப்பதோ, இறைவன் நாமத்தைப் பஜித்த வண்ணம்!!

ஈசனின் குழந்தைகளாம் ஆயிரம் பேரை வாழ முடியாமல் ஆக்கியவன், இறைவன் கோயிலில் அர்ச்சனைக்கு ஆயிரம் ரூபாய் செலவழிக்கிறான்!!

அவனை, பக்திமான், குழுவில் ஆச்சாரியாரின் 'அளவுகோல்' சேர்த்துவிடும். ஆனால், இது உண்மைப் பக்தியென்று, உலக நீதி ஒப்புக் கொண்டு விடுமா? நெற்றியில் தீட்டிய நாமம், ஜொலிக்கிறது. இவனும் ஆண்டவன் முன்நிற்கிறான் —ஆனால், சற்றுநேரத்துக்கு முன்புதான், இரண்டு கொலைகளைச் செய்துவிட்டு வந்திருக்கிறான்! இவனை, 'பக்திசிரேஷ்டர்' என்று அள்ளியணைத்துக் கொள்வாரா, ஆச்சாரியார்? அனுதினமும், ஐயன் அருகிலிருந்து ஆராதனை செய்யும் குருக்கள், இவர். நிச்சயம் பக்திமானாகத்தான் இருக்க முடியும்! ஆனால், கோயிலிலிருந்தவெள்ளிக்குடத்தை விற்கமுயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு கூண்டிலே நிற்கிறார்—

என்ன செய்வார், ஆச்சாரியார், இந்தப் பக்திமானை?

கொலைகாரனாக இருந்தால் பரவாயில்லை—திருடனாகஇருந்தால்பரவாயில்லை—காமாந்தகாரனாக இருந்தால் பரவாயில்லை — கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டு அர்ச்சனைக்கு வேண்டிய பணத்தோடு, கோயிலுக்கு வந்தால்போதுமென்று கூறுவாரா, ஆச்சாரியார்?

*

பக்தர்கள் மட்டுமே, கோயிலுக்குள் நுழைய வேண்டும் என்று கூறுகிறாரே, அந்தப் பக்தியை அளக்க அளவு கோல் தயாரிப்பது ஒரு புறம் இருக்கட்டும், 'பக்தி! பக்தி!!' என்று கூறுகிறாரே, அது எது? — ஆண்டவன் பெயரை வாயால் உச்சரிப்பதா! அர்ச்சனை அபிஷேகம் செய்வதா! கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்வதா! அல்லது, இருந்த இடத்திலிருந்தபடி, ஈசனின் நாமத்தைப் பஜிப்பதா! எது, பக்தி? வீடு வாசல்களைத் துறந்து கானகமேகி பர்ணகசாலை அமைத்து துறவறம் மேற்கொள்வதா! இல்லறத்திலிருந்தபடி மூலையிலிருக்கும் முருகனுக்கும் வேப்பமரத்தானுக்கும் வெள்ளிக்கிழமைதோறும் காவடி கட்டுவதா! எது, பக்தி? எல்லா உயிர்களிடத்தும் அன்போடு பழகுவதா! அர்ச்சகருக்கு தட்சிணைவைத்துச் சமர்ப்பிதா!—எது பக்தி?

*

எப்படி பக்தியை அளப்பது? பக்தி என்றால், எது!! — நண்பர் ஆச்சாரியார் 'பக்திமான்களையே கோயிலுக்குள் நுழைய விடவேண்டும் என்று வலியுறுத்துமுன், இந்த இரண்டு கேள்வியையும் விளக்கும், 'அளவு கோலை, நமக்கு அளிக்க வேண்டுகிறோம். அடிக்கடி பக்தியைப் பற்றிப் பேசி வருகிறார், அவர்! ஆகவே, எதுபக்தி, அதனை எப்படி அளப்பது, என்பதை அவர் தெரிந்திருப்பாரெனக் கருதுகிறோம். பக்தி எந்த முறையில் இருக்கிறதென்பதை, நாம் அறியவேண்டிய அவசியமில்லாவிட்டாலும்(தேவையில்லாததால்) பக்தி மார்க்கத்தை நாடுபவர்களுக்காகவேனும் தெளிவுபடுத்துவது நல்லதல்லவா! ஆகவே இதனை விளக்க வேண்டுகிறோம்.

வரப்பெற்றோம்

காஞ்சிபுரம், 319, காந்திரோட், தோழர் சேதுமாதவன் வெளியிட்டிருக்கும் "8x6" சைஸ் லெனின்—ஸ்டாலின் உருவம் அமைந்த புகைப்படம் ஒன்று வரப்பெற்றோம். கண்ணைக்கவரும் இப்புகைப்படத்தின் விலை அணா 10 என்றும் வியாபாரிகளுக்கு கழிவு 20% அளிக்கப்படுமென்றும் அவர் தெரிவிக்கிறார்.

புயல் நிவாரண நிதி

ரூ. 27408—4—2

[இதுவரை]

முன் கணக்குப்படி	27168-15—3
டெல்லி இராணுவத்தோழர்கள் ஜி.எம். கோபால் மூலம்	12—0—0
ஜோதி	1—0—0
திருநெல்வேலி மாவட்ட தி. மு. க. செயலாளர் வீரபாகு மூலம்	40—0—0
சென்னை 44-வது வட்ட தி. மு. க. வீடுதோறும் சென்று திரட்டிய நிதி	181—4—11
அரிசி மூலம் வரவு	5—0—0
பழந்துணிகள் எண்ணிக்கை 71	
	27408—4—2

மு. கருணாநிதி
புயல் நிதிக்குழு செயலாளர்
தி. மு. க.

வெடிகுண்டு!

வீசுவது நாமல்ல !!

அன்புள்ள சர்க்காரே!

பஞ்சமும் பட்டினியும், எங்கள் மக்களைச் சூறையாடி வருகிறது' இதனை, எத்தனையோ முறை நாங்கள் எடுத்துச் சொல்லியும், எங்களது மாகாண சர்க்கார் மூலம் உங்களுக்கு வேண்டுகோள் வந்தும், தாங்கள் பேசாமலிருக்கிறீர்கள்.

ஆறு வருடங்களாக, இந்த அவதிக்குள்ளாகிக் கிடக்கிறோம். ஆனால் நீங்கள், இதைப்பற்றி அலட்சியம் காட்டியே வருகிறீர்கள்.

மக்களிடமுள்ள பஞ்சத்தையும் பட்டினியையும் போக்கலாமென்றாலோ, எங்கள் மாகாண சர்க்காரிடம் பணமில்லை. புதியதாக வரி போடவும் வழியில்லை. ஏனெனில் 'வரி, வரி'யென்று போட்டு, மக்களிடம், ஏராளமாக வசூலித்துவருகிறோம்.

பஞ்சத்தை ஒழிக்க புதிய நீர்ப்பாசன திட்டங்களைக் கட்டலாம். ஆனால், தாங்கள் கவனம் செலுத்தவில்லை. பக்ராநங்கால், தாமோதர், ஹிராகுட் முதலிய இடங்களில் நீங்களே பொறுப்பேற்றுப் பெரிய அணைக்கட்டுகளைக் கட்டிவருகிறீர்கள். அதுபோல, ஒரு அணைக்கட்டும், பெரிய அளவில் எங்கள் பக்கத்தில் கட்டப்படவில்லை.

இந்நிலையில், எங்கள் மாகாண சர்க்காரின் கஜானாவோ வறண்டு போய்க்கொண்டிருக்கிறது. இந்த மிக மோசமான நிலையை நீங்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். வழக்கம்போல் அலட்சியம் காட்டாமல் கவனிக்கவேண்டும்.

கட்சி வேற்றுமையின்றி தென்னாட்டுப் பார்லிமெண்டு உறுப்பினர்களின் சார்பில் இந்த வேண்டுகோளை, உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

இங்ஙனம்
எஸ். வி. ராமசாமி
அம்முசாமிநாதன்
ஜி. ஆர். தாமோதரன்
எஸ். பாலசுப்பிரமணியன்
என். எம். லிங்கம்

*

கடந்த 19-ந்தேதியன்று, இவ்விதம் ஒரு வேண்டுகோள் தயாரித்து, டில்லி சர்க்கார் முன் நீட்டியிருக்கிறார்கள்—ஒன்பது, தென்னாட்டுப் பார்லிமெண்டு உறுப்பினர்கள். ஒன்பதின்மேரில், காங்கிரஸ்காரர்களே, இந்த வேண்டுகோள் தயாரிக்க முன்னின்றார்களாம். அவர்களில் சிலர் பெயரையும் மேலே தந்துள்ளோம்.

சென்னைக்கு ரூ. 10 கோடி தர வேண்டும்—என்று மேற்படி வேண்டுகோளில் வலியுறுத்தி இருக்கிறார்கள். ரூ 10 கோடி! கடனாக அல்ல உதவியாக!!

"கடனாகத் தந்தால், இப்போது எங்கள் மாகாணம் உள்ள நிலையில், அதனைத் திருப்பித்தர இயலாது. ஆகவே, உதவித் தொகையாக அளிக்கவேண்டும்" என்றும், பார்லிமெண்டு தோழர்கள், வலியுறுத்தியுள்ளார்கள்.

காங்கிரசல்லாத உறுப்பினர்கள் டில்லியின் அலட்சியத்தைஎடுத்துக் காட்டிவந்த காலம்போய், காங்கிரஸ்காரர்களே வேண்டுகோள் தயாரிக்கின்றனர்.

வேண்டுகோளா அது? அல்ல! அல்ல!!—வெடிகுண்டு.

டில்லிக்கு சென்னைமீது கவனமில்லை.

ஆறு வருடமாக அவதிப்படுகிறோம்—கவனிக்கவில்லை.

வடநாட்டில் கட்டுவதுபோன்ற அணைக் கட்டுத் திட்டங்கள், இங்கே இல்லை.

கடன் வேண்டாம் — உதவி கொடுங்கள்.

இந்தக் கோரிக்கைகளைச் சாதாரணமான வேண்டுகோள் என்று கூறிவிடமுடியாது. இந்தக் கோரிக்கைகளில் கலந்திருக்கும் அதிருப்தியும் ஆத்திரமும் சாமான்யமானதாக இருக்கமுடியாது! ஆறு வருடங்களாக டில்லி, சென்னையை அலட்சியம் செய்கிறதாம் — காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறுவது இது! ஆறு வருடங்கள்!!-சுயராஜ்யம் கிடைத்து எத்தனை ஆண்டுகளாகின்றன? புரிகிறதா! பதவி, டில்லியார் கைக்கு வந்தநாள் முதல் சென்னை அலட்சியம் செய்யப்படுகிறது — காங்கிரசார், கூறுகிறார்கள்.

அதாவது, வடநாட்டார், தென்னாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தி வருகிறார்கள் — இதனை, அம்மு சாமிநாதனும், ராமசாமியும் பிறரும் கூறுகிறார்கள்.

"நீர்ப்பாசனத் திட்டங்களை முடிக்க மத்திய சர்க்காரின் உதவியை நாடினால், சிறிதுகூட ஆதரவு அளிப்பதில்லை"

என்றும், எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதனை, டாக்டர் கிருஷ்ணசாமியோ, சேலம் பேபியோ, கடலூர் கோவிந்தசாமி கச்சிராயரோ, திருச்சி மதுரமோ, செப்பினால், ஆச்சரியமில்லை! அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் ஆனால் காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள்— அதுவும், 'மகஜர்' மூலமாக.

நாட்டின் பஞ்சத்தையும், நாடு அடையும் வேதனையையும் காட்டி 'மகஜர்' சமர்ப்பிக்கிறார்கள் — காங்கிரஸ்காரர்கள்.

டில்லி—தென்னாட்டை அலட்சியம் செய்கிறது.

இதே குற்றச்சாட்டை, முன்னாள் சென்னை முதலமைச்சரான ஓமந்தூர் இராமசாமியார், சென்னை மேல்சபையில் பேசும்போதெல்லாம் ஆதாரங்களோடு வெளியிட்டிருக்கிறார்.

ஆசாரியாரும், தமது சகாக்களிடம் உறவாடும்போது, "என்ன செய்வது? இந்த சென்டிரல்' பராமுகமாயிருக்கிறதே!" என்று, வேதனையோடு சொல்லிக்கொள்கிறாராம்.

ஆனால், மேடையில், கர்ஜிக்கும் காமராஜர் குழுவோ, 'வடநாடாவது, தென்னாடாவது — எல்லாம் பித்தலாட்டம்' என்று, முழக்குகிறது.

மேடையில் முழக்கம்! ஆனால் திரைமறைவிலோ, குமுறல்!!

இது, எத்தனை நாட்களுக்கு நீடிக்கமுடியும் — மக்கள் கண்களை மறைக்க, எப்போதுமா இயலும்? இயலாதென்பதன், விளக்கம்தான், காங்கிரஸ் காரர்கள் வீசியிருக்கும் இந்த 'மகஜர்'—அல்ல! அல்ல!!— வெடிகுண்டு!!

★

அடுத்த இதழ்

அடுத்த வாரம் (3—5—53) "திராவிடநாடு" இதழ் 12 பக்கங்களுடன் 3 அணா விலையில் வெளிவரும் லால்குடி மாநாட்டு நிகழ்ச்சிகளுடனும், மே தின விழாக்கட்டுரைகளுடனும் வெளிவரும் அதிகப் பிரதி வேண்டுவோர், புதன் கிழமைக்குள் (29—4—53) தெரிவிக்கவேண்டும். தனியாக இதழ் வேண்டுவோர் நான்கணா தபால்தலைகள் அனுப்பலாம்.

நிர்வாகி,
திராவிடநாடு.

பம்பாய் தோழர்களுக்கு!

அய்யர் வேதம் படிக்கிறார்
ஆடு மேய்ப்பவன் இடையன்
கல் உடைப்பவன் தச்சன்
செருப்பு செய்பவன் சக்கிலியன்.

*

சிறு குழந்தைகள் படிக்கும் 'அரிச்சுவடி'யை எடுத்துப்பார்த்தால், மேலே கண்டவண்ணம், எழுத்துக்கள், ஏற்ற படங்களோடு பொறிக்கப்பட்டிருக்கும்.

எளிதில் குழந்தைகளுக்கு கற்பிக்கும், முறை இதுவெனக் கூறப்படுகிறது.

எளிதோ—எளிதற்றதோ, அதுவல்ல நாம் சுட்டிக்காட்ட விரும்புவது. 'அய்யர்' — 'படிக்கிறார்' என்றிருப்பது, 'ஆடு மேய்ப்பவன்' வரும்போது 'இடையன்' என்று வந்துவிடும். அய்யருக்கு மரியாதை! இடையனும் தச்சனும் வரும்போது 'இன்' வந்து புகுந்துவிடும்!!

இந்தப்பேதத்தை நாம், அடிக்கடி மேடைகளில் எடுத்துச் சொல்லி வருகிறோம் — பார்ப்பனரின் பிடி 'அரிச்சுவடி'யிலேயே ஆரம்பமாகிறது, என்பதை விளக்க!

இதனை நாம் விளக்கும் காரணம், அவமரியாதைக்காளாக்கப்படும் இடையரும் கல்தச்சரும் நிரம்பிய நமது மக்கள், தம்மை வஞ்சித்து வளரும் பார்ப்பனீயத்தின் கொடுமையை உணரவேண்டும் எனும் ஆசையே தவிர, வேறெதுவுமில்லை.

உயர்ந்த ஜாதி! தாழ்ந்த ஜாதி!! ஒருவன் உயர்ந்தவன்! மற்றொருவன் தாழ்ந்தவன்!! — சமூகத்தை அழிக்கும் இந்தப் பேதா பேதங்கள் ஒழிக்கப்பட்டு எல்லோரும் ஓரினமாக, மனிதர்களாக வாழ வேண்டுமென்பதே, நம்முடைய இலட்சியமாகும்.

மனிதரே, யாவரும்! பேதமில்லை, இதில்!!—எனும் இந்த உயரிய லட்சியம் நம்மிடம் இருப்பதால்தான், பார்ப்பனத் தோழர்கள் உள்படபலர் நமது கழகத்தில் பங்கு கொண்டு சாதிபேத உணர்ச்சிகளை ஒழித்துக்கட்ட முன்வருகிறார்கள்.

திராவிட இயக்கத்தைத் தவிர வேறுயாரும், ஜாதி ஒழிப்பில், அவ்வளவு அக்கரை காட்டியது கிடையாது.

'ஜாதி ஒழிய வேண்டும்!' என்று பேசும் ஏனைய கட்சிகளில் காமராஜ நாடாரைக் காணலாம், வைத்யநாத அய்யரைக் காணமுடியும், அண்ணாமலைப் பிள்ளை இருப்பார், ராமசாமி ரெட்டியார் தென்படுவார், ஏ. எஸ். கே. அய்யங்கார் காட்சி தருவார்.

ஆனால், திராவிட இயக்கத்திலோ அவ்விதம் பெயருக்குப் பின்னால் 'சாதிப் பெயர்' இட்டுக் கொள்ளும் வழக்கத்தை, எவரும் கண்டிருக்க முடியாது.

'அவர்கள் எந்தச் சாதியாயிருந்தாலும் கவலையில்லை! யாவரும் மனிதரே!!'—என்கிற சகோதர பாசம்' திராவிட இயக்கத்தில் பரவியிருக்கிற அளவுக்கு, வேறெந்த அரசியல் காட்சிகளிலும் காணமுடியாது.

இந்த உண்மையை நன்றாக உணர்ந்திருந்தாலும், ஏதாவது குற்றம் சுமத்தி, சாதாரண மக்களைத் தூண்டிவிட்டு, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் குறுகிய மனத்தினர், எங்காவது, ஒரிடத்தில் இல்லாமலும் இல்லை.

இத்தகைய 'புல்லுருவி' மனப்பான்மையினரால் விளையும் விபரீதங்களை விளக்கி, பம்பாயிலிருந்து தோழர் ஒருவர் கடிதம், தீட்டியிருக்கிறார், நமக்கு.

திராவிட முரசு பம்பாய் வட்டாரங்களில் எழுப்பும் ஒலியைக் கேட்டுக் கிலி கொண்ட சிலர், ஜாதிப் பாகுபாடுகளைச் சிருஷ்டித்து, குழப்பம் உண்டு பண்ண முயல்கிறார்களாம்.

திராவிட இயக்கத் தோழர்கள் மீது வீண் பழியைச் சுமத்தி, வெறுப்புணர்ச்சிஉண்டு பண்ணிவிட முயல்கிறார்களாம்—இந்தமுயற்சிக்கு, மாற்றுக்கட்சி மனோபாவத்துடனிருந்தாலும் ஒற்றுமையும் நல்வாழ்வும் வளர வேண்டுமென்கிற நோக்கம் கொண்ட சில 'நல்லவர்களும்' ஆதரவு தருகிறார்களாம்.

இந்தச் செய்தி அறிய உண்மையில் வருந்துகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம், எல்லோரையும் மனிதர்களாக, தமது உடன்பிறப்பாளர்களாகக் கருதும் ஓர் கழகமாகும்.

கழகத்தின் உறுப்பினர்களை மட்டுமின்றி, மாற்றுக் கட்சித் தோழர்களையும் சரிசமமாகப் பாவித்து நடக்கும் கழகமாகும். அத்தகைய ஒரு கழகத்தின் மீது, சதிப் பாணத்தை வீசி, சங்கடங்களை உண்டாக்குவது, மலரும் மொட்டைக் கசக்குவது போன்ற காரியமாகும்.

கழகத்தவர்கள், பார்ப்பனீய முறை உண்டாக்கியிருக்கும் கேடுகளைக் கண்டிப்பவர்களே தவிர, தனிப்பட்ட சாதியினரின் உள்ளத்தைப் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்களல்ல.

'அய்யர்' என்று அழைக்கப் படுவதும் மற்றசாதியர்களை மட்டும் 'ன்' போட்டு அழைப்பதும் ஏன்?— என்று கேட்பது, திராவிட இயக்கமாகும்.

இதன் நோக்கம், அடிமைப்பட்ட சாதிகளாய்ப் பிரிந்துகிடக்கும் எல்லா மக்களும், உயர்வுபெற்று உன்னத வாழ்வு நடத்தச் செய்ய வேண்டுமென்பதாகும்.

இந்த உயரிய நோக்கத்தைப் பாழ்படுத்த, மாற்றுக் கட்சியிலிருந்தாலும் மறுமலர்ச்சி விரும்பும், எவரும் துணியார்.

ஆனால், 'குட்டை குழம்பினால் தானே மீன் கிடைக்கும்!' என்கிற கொக்கு மனப்பான்மை கொண்டோர், ஜாதிப்பாகுபாடுகளைப் பெரிதாக்கி! 'உன்னை இப்படிப் பேசினான்! அவனை அப்படிப் பேசினான்!', என்று தூண்டிவிட்டு, சுயலாபம் பெற முயல்வர்.

இந்தக் கழுகு மனம், சமுதாயத்தின் கேடாகும். எனவே, இத்தகைய சுயநலமிகளின் சூது வார்த்தைகளுக்குப் பம்பாயில் வாழும் திராவிட மக்கள் — குறிப்பாக தமிழர் சங்கத்தார் — இடங்கொடுக்கக் கூடாது எனத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திராவிடரியக்கம், ஜாதிகளை, விரும்பும் கழகம் அல்ல—மனிதர்களின் நல்வாழ்வுக்காகப் போராடும் கழகம்.

இந்த நல்நோக்கத்தின் அடிப்படையில் பாடுபடும் அதன்மீது வேண்டுமென்றே வெறுப்பைத் தூண்டிவிடுவது, யானை தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொள்வதை ஒக்கும்.

இதனைச் சிந்தித்துப் பார்த்து, வளரும் புதுயுகத்துக்கு முட்டுக்கட்டையிடாமலிருக்கும்படி பம்பாயில் வாழும் நமது 'சகோதரர்களை' —மாற்றுக் கட்சிக் கூடாரத்திலிருந்தாலும் நம்மவர்தானே? — கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழ் மாநிலம்—திராவிடப் பூங்கா — செழிக்கப் பாடுபடுங்கள்! சிறு விஷயங்களைப் பெரிதாக்கி மலரும் தோட்டத்தைப் பாழ்படுத்துவது நல்லதல்ல!!

★

கடவுளை அடைய வழி!

கடவுள் எல்லாப் பெரியவர்களுக்கும் மேலான பெரியாராவார், எல்லோருக்கும் மேலானவர், எல்லாத் தேவைகளும் நீங்கப் பெற்றவர், அவருக்கு யாதொன்றும் தேவையில்லை; அப்படிப்பட்ட கடவுளிடம் செல்லவேண்டுமானால் தேவைகளேயின்றி விளங்கும் பரம்பொருளிடம் நெருங்கத் தக்க விதமாகச் செல்லவேண்டும். அங்கே பிச்சை கேட்பதில்லை. யாசகர் வேஷம் தகாது. காவி உடை உதவாது. அகச்சான்றும், புறச்சான்றும் ஆசாரச்சான்றும் அங்கில்லை. தரகர் தயவு வேண்டாம். கடவுளிடம் செல்ல வேண்டுமானால் கடவுள் உடையில் செல். கடவுள் உடையாவது எது? யாசகக் குறிகள் நீங்கப் பெற்று யாதொரு தேவையும் கிடையாதென்ற நிலைமையேயாகும். அப்பொழுது மாத்திரமே கடவுளால் அழைக்கப்படுவாய் என்று கடவுளைப் பற்றிச்சொன்ன சமயங்கள்சொல்லுகின்றன. "ஆசையற்ற விடம் சிவம்", என்று சைவப் பெரியவர்களும் சொன்னார்கள். அந்தக் கடவுளையடையவோ, அதைக் காணவோ போகிறவர்களை நாம், தடுப்பதில்லை. அதற்காக தேகமுதற்கொண்டு எல்லா ஆசையையும் விட்டு, தவத்திற்கு யார் வேண்டுமானாலும் போகட்டும்.

—சாமி கைவல்யம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

தால், ஏடுகள் பலதீட்டும்! வால்நட்சத்திரம் முளைத்ததாகக்- கதை தீட்டும்! கைவல்யம் அவர்கள், கண்ணைக்கரிக்கும் கடலாக இருந்தார். திருவண்ணாமலை ரமணரைப்போல, இடையில் கௌபீனத்தைக் கட்டிக்கொண்டு, ஏராளமான சொத்துக்களைச் சம்பாதித்து தம்பிக்கு'உயில்' எழுதி வைத்துவிட்டுப் போகும், 'மகான்' அல்ல, இவர்!! மக்களை எண்ணினர் — அவர்களுக்காகப் பாடுபட்டார். சித்தர்—ஜீவன்முக்தர்—சாதுசந்நியாசி—ஜீயர் — மடாதிபதி—மகான் — இந்த ரகங்களில்' ஒன்றாகச் சேரவில்லை. அவர்படித்த கல்வியும், அறிந்திருந்த நூல்களும், அவரைப் பெரிய 'மகானாக்கி'விடமுடியும். ஆனால்; அவர் விரும்பினரில்லை! அவைகளை வைத்துக்கொண்டு மக்களின் அறியாமையை வளர்க்கவிரும்பவில்லை! — அதனால் தான், அவரது பிரிவுகேட்டு,வாலிப உலகம் கண்ணீர் வடிக்கிறது.

இருளிலே உதயமாகிய அறிவியக்கத்துக்கு, ஆதவன் போல விளங்கினர், கைவல்யம் அவர்கள்.

அவரது அனுபவம் வழங்கிய ஆராய்ச்சிக் கருத்துக்களும், எதிர்காலத்தை அவர் அறைகூவியழைத்த அன்புக் குரலும், நமது காதுகளைவிட்டு நீங்கமுடியாது.

வேத, புராண, மதச் சாக்கடைகளுள் புகுந்து, அங்கே தாம் கண்ட நாற்றங்களை விளக்கி, நாட்டில் நறுமணம் பரவப் பாடுபட்டார்.

அத்தகைய ஓர் அறிவுப் பெரியாரை இழந்து விட்டோம்.

அவரது இழப்பு, ஈடுசெய்ய முடியாததாகும்.

அவர் மனிதர் வாழப் பாடுபட்டார்.

"நன்மை செய்தலே ஜீவிதம். பிறருக்கு நன்மை செய்யாமலிருப்பதே மரணமெனப்படும். நீங்கள் பார்க்கின்ற மானிட மிருகங்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் மரித்தவர்களே — பிரேதங்களே ஏனெனில், மனித உயிர்களிடம் அன்பு செலுத்துகிறவன் சாவதில்லை —எப்போதும் ஜீவிப்பான்"

என்ற கொள்கையோடு வாழ்ந்தார்—எவ்வுயிரும் அவருக்கு ஈசன் கோயிலாக இருந்தது—அந்த உயிர்களின் உயர்வுக்காகப் பாடுபட்டார்.

"அவதி — அவதி — ஆகாரம்! இங்கு எனக்கு ஆகாரம் கொடுக்க முடியாத கடவுளால் மோட்சலோகத்தில் எனக்கு நித்தியானந்தத்தை கொடுக்க முடியுமென்று நம்பமாட்டேன். தேசம் முன்னேற்றத்தில் வரவேண்டும். எளியவர்கள் போஷிக்கப்பட வேண்டும். கல்வி, பரவ வேண்டும். வைதீகக் கொடுமை கூடவே கூடாது. ஜன சமூகத்தில் கொடுமை உதவாது"

எனபதே அவருடைய தாரக மந்திரமாயிருந்தது. அத்தகைய, ஒரு அறிவுப் பெரியார்—நமது வழிகாட்டி — இங்கில்லை; இனிக் காணமுடியாது.

அவரது அறிவுரைகள், இதோ! நடமாடுகின்றன, நம் கருத்துத் திரையில்.

அவைகளை பின்பற்றுவோம். அவரது பெயர், அவரது சொற்படி, சாகாது! சாகாது!! புதுயுகம் இருக்கும் வரை சாகாது!!!

★

காஞ்சி தியாகர் மன்றம்

காஞ்சி தியாகராய மன்றம் (தி. மு. க. கிளை) ஆண்டுவிழா 19-4-53 காலை கண்ணன் டாக்கீசில் ஆரம்பமாயிற்று. தோழர் அரங்கண்ணல் தலைமை வகித்தார். மன்ற அலுவலகத்தில் தோழியர் அருண்மொழி கொடியேற்றுவித்தார். தியாகர் உருவப்படத்தைத் தோழர் சி. வி. எம். அண்ணாமலை திறந்துவைத்தார். தோழர் தெய்வசிகாமணி, எம். எல். ஏ., பேசிய பிறகு தோழியர் அருண்மொழியும் தோழர் டி. கே. தாமரைச் செல்வனும், (தஞ்சை) சொற்பொழிவாற்றினர். "பார்ப்பனத்தோழர்கள் பங்கேற்று நடத்தும், தியாகராயர் மன்றம்" என்று சிறப்பித்துபேசினர். பிறகு இசைப் போட்டி இரு பகுதியாக நடைபெற்றது. திராவிட இயக்கக் கீதங்களை, சிறுவர்கள் குழு ஒன்றும் வாலிபர்கள் குழு ஒன்றுமாகப் பாடினர். சிறுவர்களில் தாமஸுக்கு முதல் பரிசான மெடல் ஒன்று அளிக்கப்பட்டது. வாலிபர்களில் கா. வே. முருகேசனுக்கு வெள்ளிக் கோப்பை ஒன்று முதல் பரிசாக வழங்கப்பட்டது. போட்டியில் கலந்துகொண்ட எல்லோரையும் விழாத்தலைவர் பாராட்டிப்பேசினர் —வாலிபர்களில் முதல் பரிசுக்கு சமமாகவும்அடுத்தபடியாகவும்நின்ற ஆனந்தனைப் பாராட்டி மலர்மாலை அணிவித்தார். இசைப்போட்டியின் நீதிபதிகளாக டி. கே. தாமரைச் செல்வன், தெய்வசிகாமணி, எம். எல் ஏ, அரங்கண்ணல் ஆகியோர் இருந்தனர்.

விழாவின் பிற்பகுதி நிகழ்ச்சியாக மாலை 5-மணிக்கு ஆடிசன்பேட்டையில் தோழர் அ பொன்னம்பலனர், தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தியாகராயர் சேவை குறித்து பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் க. அன்பழகன், 'அரசியல்நிலை' குறித்து தோழர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். விழா மிகவும் சிறந்தமுறையில் கொண்டாடப்பட்டது.

★

அந்தோ...! நம் கைவல்யம் மறைந்தார்

[அ. பொன்னம்பலனர்]

கைவல்யம், கைவல்யசாமியார் என்றழைக்கப்பட்ட அறிவியக்கப் பெரியார், பாலக்காட்டில் மறைந்தார் என்ற செய்தி கேட்டுக் கலக்கமுற்றோம். அறிவியக்கத்தில் ஆர்வமுள்ள தோழர்களும், 'குடி அரசு,' 'பகுத்தறிவு,' 'திராவிடன்,' 'திராவிடநாடு' போன்ற பத்திரிகைகளில் அவர் எழுதிய அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் துணைபுரிகின்ற கருத்துக்கள் நிறைந்த கட்டுரைகளைத் தொடர்ந்து படித்து தெளிவு பெற்ற தோழர்களும் அவர் பிரிவு கேட்டு, வருந்தாமலிருக்க முடியாது. அவர், கைவல்யம், வேதாந்தம், சித்தாந்தம், இராமாயணம், பகவத்கீதை, பாரதம், தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருமூலர் திருமந்திரம்,திருவிளையாடல் புராணம், மனுநீதி போன்ற பல நூல்களையும் நன்றாகப் படித்தும், பிறருக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுத்தும், திருமணமே செய்து கொள்ளாத காரணத்தாலும், கைவல்யம், சாமியார் என்று அழைக்கப்பட்டார்போலும்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும், சுயமரியாதைக் கொள்கைகளையும் எதிர்த்துப் பேசிய காலத்தில், நம் கைவல்யம், சைவமெய்யன்பர்கட்கும், திரு. வி. க., மறைமலையடிகள் போன்ற சமய வேடதாரிகட்கும், சங்கராச்சாரியார், மடாதிபதிகள் போன்ற மத போதகர்கட்கும்; தேசியத்தலைவர்கட்கும,தேசியப் பத்திரிகைகட்கும் பலப்பல கேள்விகளைக் கேட்டு, கட்டுரைகள்மூலம் விளக்கம் கேட்பார். பதில் கிடைக்கவில்லையே என்றும் தளரமாட்டார். தொடர்ச்சியாக எழுதியும், கேள்விகள் கேட்டும் பொதுமக்கள் தெளிவு பெறும்படி— அறிவு பெறும்படி விளக்கம் தருவார். பொதுமேடைகளில் பேச விரும்பமாட்டார். பொது மக்கள் அதிகம் விரும்பிப் பேசும்படி கேட்டுக் கொண்ட ஒரு சில மகாநாடுகளில் பேசினர். அவர் பேச்சு, வர்ணாச்சிரமக்காரர்கட்கும், வைதீகர்கட்கும், புராணீகர்கட்கும், சமயப் பிரசங்கிகட்கும், மதப் போதகர்கட்கும் மனோவேதனையைத் தருமென்றாலும், அவர் தரும் விளக்கம் அறிவு ஒப்புக் கொள்ளும் படியாகச் சொல்லும் தனிச் சிறப்பு, எல்லோரும் பாராட்டி, ஒப்புக்கொண்டு திருந்தும்படிக்கும் பயனளித்து வந்தது.

நம் சமூக சீர்திருத்த, அரசியல், பொருளாதார முன்னேற்றப் பிரச்சாரத்திற்கு ஆக்கம் தந்த—நம் அறிவு இயக்கக் களஞ்சியம், பகுத்தறிவுச் செம்மல், நம் கைவல்யம் அந்தோ, மறைந்தார். அவர் தம் பிரிவு நம் அறிவு இயக்கத்திற்கு ஈடுசெய்யமுடியாத பெரும் இழப்பாகும். பழைய கோட்டை பட்டக்காரர் கோவை அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்களாலும் இறுதிவரை ஆதரிக்கப்பட்டு, வாழ்க்கையில் வறுமை, வாட்டம், எதுவுமின்றி மகிழ்ச்சியுடன் அறிவியக்கத்திற்கு அரும்பாடு ஆற்றிய பெருந்தகைப் பெரியார் நம் கைவல்யம் அவர்கள் உலக வாழ்க்கையை நீத்தார். நம் கைவல்யம் அவர்கள் செய்த அறிவுப் பணியைப் பின்பற்றி நாம் பணி புரிவோமாக. பிறந்தவர், ஒருநாள் மறைவது உறுதி, மறைந்தவர் எவரும் அவர்கள் தேடிய பெரும் பொருளைத் தம் உடன்கொண்டு செல்வதுமில்லை. புகழே நிலைத்து நிற்கும் அறிவியக்கம்மறைந்தவரின் புகழொளியைப் பரப்புமாக.

வாலிபர்களுக்கு

வாலிபர்களே!

நான் சொல்லவேண்டியதை எல்லாம் முன்னமே எழுதியிருக்கிறேன். அப்பொழுது நீங்கள் சிறு வாலிபர்கள். அப்பொழுது அதைப் படித்திருக்கமாட்டீர்கள். அதனால் நீங்கள் கவனிக்க வேண்டிய சில எழுதுகிறேன்.

உலகத்தில் அறிவாளிகளாக இருப்பவர்கள் எவரும் ஒவ்வொரு துறையிலும் முற்போக்கு ஏற்பட வேண்டும் என்பதில் கவலையும் கருத்தும் உடையவர்களாக இருப்பார்களே ஒழிய பிற்போக்குடையவர்களாக இருக்க மாட்டார்கள்.

ஆதலால் மக்கள் ஒவ்வொருவரும் தற்காலம், தான் இருக்கும் நிலைமையையே சிரமமானநிலையென்றும், தமது எண்ணங்களும் நம்பிக்கைகளுமே சரியானவைகளென்றும் கருதிக்கொண்டு இராமல் அறிவிற்கும் அனுபோகத்திற்கும் ஒத்து வராத விஷயங்களைத் தைரியமாய் புறக்கணித்துப் பகுத்தறிவிற்கு ஏற்றதை ஏற்றுக்கொள்ள முன் வர வேண்டும். சிறுபிராய முதலே ஜன சமூகங்களுக்குள் புகுத்தப் பட்டதான எவ்வித உணர்ச்சியும், மக்களைப் புதிய தோற்றங்களுக்கு தக்கவாறு நடந்து கொள்ள விடாமல் தடை படுத்துவதுடன் பல கஷ்டங்களுக்கும் ஆளாக்கியே தீருகின்றது. ஆனதால் அறிவையும் ஆராய்ச்சியையும் பிரதானமாகக்கருதி அதன் மூலம் எந்த முடிவையும் அடையும்படி பழக வேண்டும்.

உலகம் வாலிபர்களைப் பொறுத்ததென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். அதை நீங்கள் உண்மைப் படுத்தவேண்டும். உங்கள் மனதில் நன்றாய் ஆராய்ந்தும் அனுபோகத்தை ஒட்டி நன்மை பயக்கக் கூடியதுமான விஷயங்களை மனதில் வைக்கவேண்டும்.

நமது முன்னோர்கள் எவ்வளவு பெரிய பிரச்னையானாலும் புராண ஆதாரங்களைக்கொண்டும் நெடுநாளைய பழக்கவழக்கங்களைக்கொண்டுமேதான் நிர்ணயித்துவிடுவதேயல்லாமல் அறிவோடு பரிசீலனை செய்து பார்த்து முடிவு காண முயற்சித்ததே இல்லை.

அதனால் நமது முன்னோர்கள், ஆராதனை,பூசையென்றும், கிரிகைச் சடங்குகளென்றும், தெய்வம்—ஆச்சாரி—பூசாரி—புரோகிதன் முதலியவர்கட்குப் பயந்து அவர்கள் சட்ட திட்டங்களான கட்டுப்பாட்டுக்குத் தலைகுனிந்து பல தலைமுறையாய் வழங்கப்பட்டு அடிமைகளைப்போல் உழன்று வந்ததினால் இப்பொழுது நீங்கள் நினைப்பதுபோல அவர்கள் நினைக்கமுடியாமல் போய்விட்டது. இப்பொழுதிருப்பவர்களோ எது வந்துவிடுமோ என்கிற பயத்தால் எந்தத் துறையிலும் அவர்களால் ஏதாவது செய்யமுடியுமென்கிற உண்மை அவர்கள் முகத்தின் முன்னே நின்றாலும் கண்ணுக்குத் தெரியாமல் போகிறது. இங்கிலீஷ் படித்து, சிகிரெட்டுக் குடித்து, ஐரோப்பிய மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டாலும் அவர்களுக்கும் தெளிவுண்டாவதில்லை. நீங்கள் அப்படியிருக்க நியாயமில்லை.

—கைவல்யம்

"விந்தியா"

4 அணா விலையில் அழகிய முகப்புடன் பபாயிலிருந்து வெளிவரும் 'விந்தியா' எனும் மாத இதழைக் கண்ணுற்றோம். மறுமலர்ச்சி யுகத்துக்குத் தொண்டாற்றும் வகையில் வளரவேண்டுமென விரும்புகிறோம். கொள்கைகளைப்பற்றி கருத்துவேற்றுமைகள் காணப்படினும், பழைமைப்பித்து மூடநம்பிக்கை ஆகிய சமுதாயக்கேடுகளை ஒழிக்க இந்த இதழ் பாடுபடுமென எதிர்பார்க்கிறோம்.

ஈழத்தில் நம் குரல்

தோழர்கள் சி. பி. சிற்றரசு இரா. சு. தங்கப்பழம் ஆகியவர்களின் இலங்கை சுற்றுப் பிரயாணத்தின் இரண்டாவது நிகழ்ச்சி 19—4—53 ஞாயிறு கிராண்ட்பாஸ் தி. மு. க. கிளையின் சார்பாக நடைபெற்றது.

மாலை 5-மணிக்கு நகர மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமாயிற்று.

தோழர் டி. எம். பீர்முகமது விழாவிற்குத் தலைமைவகித்துதனது உரையை நிகழ்த்தினர். "இலங்கை தி. மு. க. வின் அரும் பெரும் பணிகளை குறிப்பிட்டு திராவிட நாட்டுப் பிரச்சனையில் இலங்கை தி. மு. க. வின் பங்கு என்ன என்பதை வந்திருக்கும் தோழர்கள் குறிப்பிட இருப்பதாகக் கூறினர் தோழர் கலாநேசனின் பாடலுக்குப்பின் தோழர்கள் இளஞ்செழியன், கோமஸ் ஆகியோர் பேசினர். பெருத்த ஆரவாரத்திற்கும் கை தட்டலுக்கும் இடையே தோழர் தங்கப்பழம் பேசினர்.

"இதுவரை வேறு எந்த அரசியல் கட்சியும் தொடவிரும்பாத, நினைக்காத, சாதிக்க முடியாத மாபெரும் சீர்திருத்தப் பிரச்சாரத்தை தி. மு. க. செய்து வருகிறது என்றும், பழமையில் மூழ்கிக் கிடக்கும் மக்களுக்கு வெறும் சுதந்திரம் மட்டும் பயன்படாது, ஆட்சியில் இருப்பவர்களே வைதீக வெறியர்களாகயிருந்தால் அவர்கள் ஆட்சியில் மக்களுக்கு எப்படி முன்னேற்றத்தை காட்டமுடியும். பார்ப்பனர்களின் காலைக் கழுவுகிற ஜனுதிபதியும் பஜனை பாடச் சொல்லுகிற மந்திரியும் மக்களுக்கு என்ன செய்ய முடியும்" என்ருர்.

"புராணஇதிகாசங்களால், அவைகளை மக்களிடையே பரப்பி வருவதால் ஏற்படும்அறியாமையைப்பயன்படுத்தி ஒரு கூட்டம் வாழுகிறது. நம் மக்கள் வீழ்ந்து கிடக்கிருர்கள். இதுவரை நேரில் காணுத ஒரு நபருக்கு, கடவுளுக்கு நாங்கள் எப்படி விரோதிகள் என்று கூற முடியும். கடவுள் மதம், சாத்திரங்களால் ஏற்படும் அறியாமையை ஒழிக்கத்தான் தி. மு. க. பாடுபடுகிறது" என்ருர்.

மேலும் தொடர்ந்து, "நாட்டுப் பிரச்சினையில் தி.மு.க. திட்டத்தை எதிர்த்தவர்களெல்லாம் இன்று ஓரளவு உணர்ந்து வருகிருர்கள். தனியரசு திட்டத்தை எதிர்ப்பவர்கள் என்ருவது ஏற்றுத்தான் தீருவார்கள்" என்ருர். இலங்கை தமிழர் பிரச்சினையை ஒட்டி, திராவிடத்தின் பொருளாதாரத்தைப்பற்றிப் பேசுகையில்,"இலங்கையைத்தமிழர்கள் சுரண்டுவதாகக் கூறப்படுகிறது, இங்கே ஒன்பது லட்சம் தமிழர்கள் வாழுகிருர்கள். அத்தனைபேரும் தோட்டத் தொழிலாளிகளாக உழைப்பாளிகளாக இருக்கிருர்கள். ஆனுல், திராவிடத்தை சுரண்ட அங்கே 9 லட்சம் பேர் இல்லை—9 பேர்தான் இருக்கிருர்கள். வெள்ளை வடநாட்டு பெரும் முதலாளிகள், பஞ்சாலைகள், பத்திரிகை நிலயங்கள், பாங்கிகளில் ஆதிக்கம் வகிப்பவர்கள்" என்ருர். மற்றும், திராவிடத்தின் பிரிவினையின் அவசியத்தை விளக்கிக் கூறி தன் பேச்சை முடித்தார்.

தோழர் சி. பி. சிற்றரசு பேசுகையில், "பணத்தை சுரண்டுபவனை நீ விரட்டு; ஆனுல், ரப்பர் தோட்டத்தில் பால் மரத்தை சுரண்டி வாழுகிற தொழிலாளியை விரட்டாதே. உன் நாட்டு மக்களை உங்கள் நாட்டுக்கு அழைத்துக்கொள் என்று டட்லி சேனநாயகா நேருவைப் பார்த்துச் சொன்னுல் நேரு தலைகுனியத்தான் செய்வார். ஆனுல் நாங்கள் கோருகிறபடி திராவிட நாட்டுப் பிரிவினைக்குப் பின், இதே கேள்வியை டட்லி சேனநாயகா என்னிடம் கூறினுல், இங்கிருக்கும் லட்சோபலட்சம் தமிழர்களுக்கும் ஆளுக்கொரு விமான டிக்கட் வாங்கிக் கொடுத்து நான் என் நாட்டுக்கு அழைத்துக்கொள்வேன். நாங்கள் மானமில்லாதவர்கள் அல்ல. தமிழர்களுக்கு மானம் ஒன்றுதான் பிரதானம். என் நாட்டில் என் மக்களை வாழவைக்க எங்களுக்கு வழி தெரியும். இப்பொழுது எங்களுக்குப் பிரச்சினை பெரிதாக வளர்ந்து கொண்டே வருகிறது. இலங்கையிலும், பர்மாவிலும், ஆப்பிரிக்காவிலும் அவதிப்படும் மக்களை திராவிடத்திற்கு அழைத்து வாழவைக்க திராவிடத்தின் எல்லையைப் பெரிதாக்கவேண்டும்போல் தோன்றுகிறது. இடம் கிடைக்காவிட்டால் இலங்கைமீதும் படைஎடுக்கவேண்டியதுதான்! ஒரு காலத்தில் சாதாரண காவிரியின் கரையை விரிவாக்க கரிகாலன் இலங்கைமீது படையெடுத்திருக்கிருன். நாங்கள் இந்தக் காளைகளை வாழவைக்க ஏன் படையெடுக்கக்கூடாது?" என்ருர்.

"அறிவுள்ள சமுதாயந்தான்சுதந்திரத்தை அனுபவிக்கமுடியும். அதனுல்தான் நாங்கள் சமூக சீர்திருத்தத்தை பிரதானமாகக் கருதுகிருேம். சரித்திரங்களையும், புராணங்களையும் துருவி ஆராய்ந்து மக்களுக்கு விளக்குகிருேம். பார்ப்பனர்களின் கொடுமைகளை ஆதாரபூர்வமாக நிரூபிக்கமுடியும். சரித்திர ஆசிரியர்கள், மாணவர்கள் இதை மறுக்கமுடியுமா?" என்ருர்.

மேலும் "இலங்கைவாழ் தமிழர் பிரச்சினைக்கு எங்கள் சுற்றுப் பயணம் தி. மு. க. மத்திய கழகம் மூலமாக ஒரு முடிவு கட்டும். இன்னும் நாங்கள் பத்து பதினைந்து நாட்கள் நன்ருக எல்லா பகுதிகளுக்கும்சுற்றி நிலைமையை தெளிவாக அறிந்து தி. மு. க. அதிகாரபூர்வமாக இங்கு வாழும் தொழிலாளர்களுக்கு எந்த முறையில் பணியாற்றலாம் என்று தெரிவிக்க முடியும்" என்று கூறி முடித்தார்.

தலைவர் முடியுரைக்குப் பின் இரவு "நீதிதேவன் மயக்கம்" நாடகம் நடைபெற்றது. கழகத்தோழர்கள் நடித்தனர். நாடகத்தின் கருத்துக்கள் அன்றைய விழாவை மேலும் சிறப்படையச் செய்தது. தோழர் சிற்றரசு நாடகத்திற்கு தலைமைவகித்து"நாடகசினிமாவால் நாட்டுக்கு நன்மை" செய்ய முடியும் என்பதை தி. மு. கவின் பணிகள் மூலம் விளக்கினர். அதோடு விழா முடிந்தது.

இந்த மாபெரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே ஒரு பெரும் விழிப்புணர்ச்சியையும், எழுச்சியையும் உண்டாக்கியிருக்கிறது. 18—4—53-தேதி அகில இலங்கை மத்திய தி. மு. க-வின் சார்பாக கொழும்பு ஜெம்பட்டாவீதி இரத்தினம் பார்க்கில், ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் ஆர். ஏ. மணி தலைமையில் தோழர்கள் சிற்றரசு—தங்கப்பழம் ஆகியோர் பேசினர்.

★

ஆச்சாரிகள்

கனம் ராஜகோபாலாச்சாரியார் வக்கீல் வேலையைவிட்டு, தேசத்திற்காக காங்கிரசில் உழைத்தவராயிற்றே; அவரையும் குற்றம் சொல்லலாமா என்று தோன்றலாம். ஆச்சாரிகளென்கிற பிராமண ஆச்சாரிகளெல்லாம் பூர்வகாலம் தொட்டு, மற்ற சமூகங்களை கல்வியிலோ, அறிவிலோ, முன்னேற்றமடையவிட்டதில்லை. தப்பித் தவறி முன்னுக்கு வருகிறவர்களுக்கு வஞ்சனையும் கொடுமையும் செய்து வந்திருப்பதாகவே சரித்திரம் சொல்லுகிறது. அவர்கள் படித்த வேதத்திலும் அப்படியே இருக்கிறது; அனுபவங்களும் அப்படியே தெரியப்படுத்துகின்றன.

கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் வில்வித்தை கற்றுக் கொடுத்த துரோணச்சாரி, ராஜகோபாலச்சாரியை விட எத்தனையோ மடங்கு ஞானத்திலும் தவத்திலும், வரப்பிரசாதத்திலும் மேலானவர்; கடவுள் அருள் உடையவர். இந்த ஆச்சாரியாருடைய குணத்தை உங்களுக்கு விளக்கினுல், மற்ற ஆச்சாரிகளுடைய எண்ணத்தை விளக்கவேண்டியதில்லை.

அந்த துரோணச்சாரியிடம், ஏகலைவன் என்கிற வேடன் வந்து வில் வித்தை கற்றுக் கொடுக்கக் கேட்டான். நான் ராஜாக்கள் பிள்ளைகளுக்கு வில்வித்தை கற்றுக்கொடுப்பதே ஒழிய, வேடனுக்குக் கற்றுக் கொடுக்கமுடியாது, என்றுசொல்லி விட்டார். அந்த வேடன், துரோணச்சாரியைப் போல ஒரு சிலை செய்து, தன்னுடைய சிலம்பக் கூடத்தில் வைத்து, அந்தச்சிலையை குருவாக நினைத்து, குருபத்தியால் விலவித்தையைக் கற்றுக்கொண்டான். ஒரு நாள் அந்த வேடனுடைய காட்டிற்கு அர்ச்சுனன் வேட்டையாடப் போனுன். அர்ச்சுனன் கூட்டிப்போன நாய், வேடனுடைய சிலம்பக் கூடத்திற்குப் போய் துரோணச்சாரியின் சிலையை அசுத்தப்படுத்திற்று. அதைத் தெரிந்த வேடன், ஒரு பாணத்தை விட்டு நாயைக் கொல்லாமல் தேகமெல்லாம் காயப்படுத்தினுன். நாய் அர்ச்சுனனிடம் வந்தது. அதைப் பார்த்த அர்ச்சுனன், ஆச்சரியப்பட்டு இந்த மாதிரி வில்வித்தை தெரிந்தவன்யார்? நமது ஆச்சாரிக்கு மட்டுமே தெரியும். எனக்கும், அவர்மகன் அஸ்வத்தாமாவுக்கும் தவிர வேறு யாருக்கும் சொல்லிக் கொடுத்ததில்லை என்று சொல்லியிருக்கிருரே? அப்படியிருக்க இந்த அஸ்திர வித்தையால் இந்த நாயை எய்தவன் யாவன்? ஆச்சாரியாரிடமே கேட்போமென்று, ஆச்சாரியாரிடம்போய், நாயைக் காட்டி விஷயத்தைச் சொன்னுன். ஆச்சாரியார், ஏகலைவனை அழைத்து. நீ எப்படிக் கற்றுக்கொண்டாய் என்று கேட்டார். தாங்கள் என்னை மறுத்துவிட்டவுடனே தங்களைப் போல் சிலை செய்து அதைக் குருவாக வைத்து வில்வித்தையைக் கற்றுக்கொண்டேன் என்ருன்.

வேடனுடைய வில்வித்தையின் சக்தியைக் கெடுத்துவிட வேண்டுமென ஆலோசித்த ஆச்சாரிகள், வேடனைப் பார்த்து, என்னைக் குருவாகக் கொண்டாயே குருதக்ஷணை எங்கே என்று கேட்டார். வேடன் என்ன வேண்டுமென்று கேட்க, ஆச்சாரியார் வேடனின் கைப்பெருவிரலைக் கேட்டார். உடனே, தன் பெரு விரலை வெட்டி குருதக்ஷணையாக் கொடுத்தான்.

ஆச்சாரிகள் சொல்லிக்கொடுக்காமல், குருபக்தியாலும், தன் முயற்சியாலும் வில்வித்தை படித்துக் கொண்டதற்கு, அவன்பேரில் சந்தோஷப்பட்டு, தனக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் அவனுக்குச் சொல்லிக் கொடுத்து, குருபக்திக்கும் முயற்சிக்கும் மெச்சாமல் அவன் பெருவிரலை வெட்டி, வில் பிடிப்பதற்கே உபயோகப் படாமல் அவனையும் கெடுத்த ஆச்சாரிகள் மனோபாவத்தை நீங்களே ஆலோசித்துப் பாருங்கள்.

[1934-ல்—கைவல்யம்]

வட ஆற்காடு மாவட்டத்தில்!

அரக்கோணம்: ஏப், 12, அந்தோனியார் கோவில் தெருவில் இலட்சியவாதி நிதி பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏ. எல். சி. கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். மறைந்த தோழர் சேவைப்பற்றி பலர் பேசியபின் அவர் குடும்பத்திற்கு ரூ. 50—0—0 நிதி அளிக்கப்பட்டது. கூட்டத்தில் சௌந்தர பாண்டியன்—ஸ்டாலின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

நரசிங்கபுரம்: தி. மு. க. இரண்டாவது ஆண்டுவிழா அரக்கோணம் அடுத்த நரசிங்கப்புரத்தில் 15-4-53 அன்று மாலை 6மணிக்கு நாகப்பன் தலைமையில்நடந்தது. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., ஏ. எல். சி. கிருட்ணசாமி, மறவன் பேசினுர்கள். ஏகாம்பரம் தீர்மானங்கள் படித்தபின், செயலாளர் நன்றிகூறியதும் கூட்டம் முடிந்தது.

நாகவேடு: அரக்கோணம்அடுத்த நாகவேடு கிராமத்தில் 17—4—53 மாலை 6மணிக்கு துவக்க விழா பொதுக்கூட்டம் நடந்தது. ஏ. எல். சி. கிருட்ணசாமி தலைமை வகித்தார். என். வி. நடராசன் சொற்பொழிவாற்றினுர். அன்று மாலை 5-மணிக்கு கழகச் சொந்தக் கட்டிடத்தில் மாவட்ட செயலாளர், நிர்வாகிகள் தேர்தலை நடத்தி கழகக் கொடியை கட்டிடத்தில் மாவட்ட செயலாளர் ஏற்றிவைத்தார்.

ஆற்காடு: 20—4—53 அன்று மாலை 6மணிக்கு ஆற்காடு பெரியார் மைதானத்தில் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி தலைமை வகித்தார். ஆர். நடராசன், என். வி. நடராசன் பேசினுர்கள். செயலாளர் லோகநாதன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

நிகரற்ற மருந்து (தேனி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/983
சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 Special ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)
நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.
பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)
SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram